மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

# சுயகற்றல் கையேடு

# 2020

# சைவநெறி

# தரம் - 09

## அயனும் மாலும் 01

1) "செங்கணானும் பிரமனும்…." என்று பாடியவர் யார்?
திருநாவுக்கரசு நாயனார்

2) எமது சமயத்தின் முழுமுதற் கடவுள் யார்?
சிவபெருமான்

3) கடவுளின் இயல்புகள் நான்கு தருக.
எங்கும் நிறைந்தவர் — எல்லாம் அறிபவர்.
இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவர். — எல்லாம் வல்லவர்.
பிறப்பு இறப்பு அற்றவர். — கருணை உள்ளம் கொண்டவர்.

4) படைப்புத் தொழிலுக்கு அதிபதி யார்?
பிரம்மா

5) காத்தல் தொழிலைப் புரிபவர் யார்?
விஷ்ணு

6) பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் முரண்பாடு ஏற்படக் காரணம் யாது?
இவ்வுலகில் யார் பெரியவர் என்ற அகங்காரத்தினால் தர்க்கம் ஏற்பட்டது.

7) பேரொளிப் பிளம்பாகத் தோன்றியவர் யார்?
சிவபெருமான்

8) ஒளிப்பிளம்பின் அடியைத்தேடிச் சென்றவர் யார்? என்ன வடிவம் எடுத்தார்?
விஷ்ணு - பன்றி வடிவம்

9) ஒளிப்பிளம்பின் முடியைத் தேடிச் சென்றவர் யார்? என்ன வடிவம் எடுத்தார்?
பிரமா – அன்னப் பறவை

10) சிவபெருமானின் திருமுடியில் இருக்கும் பேறு பெற்ற பூ எது?
தாழம்பூ

11) 'நீ யார்? எங்கிருந்து வருகிறாய்' என்று தாழம்பூவிடம் கேட்டவர் யார்?
பிரம்மா

12) பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் அசரீரி கூறிய செய்தி யாது?
"இந்த ஒளிப்பிழம்பின் அடியையோ முடியையோ யார் கண்டு வருகிறாரோ அவரே பெரியவர்"

13) தாழம்பூவிடம் சரணடைந்தவர் யார்?
பிரம்மா

14) தாழம் பூ செய்த தவறு யாது?
பிரம்மா, சிவபெருமானின் முடியைக் கண்டார் எனப் பொய்ச்சாட்சி கூறியமை.

15) பூசைக்குரிய தகுதியை இழந்தது எது?
தாழம்பூ

16) சிவனின் முடியைக் கண்டுவிட்டதாக பொய் உரைத்த பிரம்மனுக்கு கிடைத்த தண்டனை என்ன?
இந்த உலகில் கோவில் கிடையாது. உலகத்தவரின் வழிபாட்டை, மதிப்பை இழந்தார்.

17) பிரம்மாவுக்கும் தாழம்பூவிற்கும் கிடைத்த தண்டனைகள் நமக்கு உணர்த்தும் படிப்பினைகள் யாவை?
நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய் கூறக் கூடாது.
பொய்யுரைத்தால் இறைவன் எம்மைத் தண்டிப்பார்.

18) பேரொளிப்பிழம்பு குளிர்ந்து ஒரு மலையாக ஒடுங்கியது. அது எது?
திருவண்ணாமலை

19) இறைவன், திருமால் பிரம்மன் இருவருக்கும் அருள் புரிந்த திருநாளை எந்நாளாக அனுட்டிக்கப்படுகின்றது?
திருக்கார்த்திகைத் தீபவிழா

20) சிவராத்திரி விரதத்துடன் தொடர்புடைய புராணக்கதை எது?
பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய கதை

21) மும்மூர்த்திகளும் யாவர்?
பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்

22) திருவண்ணாமலையில் பெரும் சமூகவிழாவாகக் கொண்டாடப்படும் விழா எது?
திருக்கார்த்திகை விளக்கீடு

23) அடிமுடி தேடிய புராணக்கதையுடன் தொடர்புடைய சிவமூர்த்தம் எது?
இலிங்கோற்பவ மூர்த்தம்

24) இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றிய நாளோடு தொடர்புடைய சிவ விரதம் எது?
சிவராத்திரி

25) இலிங்கோற்பவ மூர்த்தம் உணர்த்தும் விடயம் யாது?
மாலும் அயனும் காணமுடியாதவாறு இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றியருளிய அருட்செயலை உணர்த்துகின்றது.

26) சொக்கப்பனை எரித்தல் என்றால் என்ன?
விளக்கீட்டின் போது ஆலயங்களில் உலர்ந்த தென்னோலை, கமுகோலை, வாழைச்சருகு போன்றவற்றை நிறைவாகக் கட்டி, பெரியதொரு தீபமாக எரிய வைப்பர். இதனையே சொக்கப்பனை எரித்தல் என்பர்.

27) ஆலயங்களில் சொக்கப்பனை எரித்தலின் நோக்கம் யாது?
இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றிய அருட்செயலை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக எரிக்கப்படுகிறது.

## ஒழுக்கம் தரும் விழுப்பம் 02

28) விழுப்பம் என்பதன் பொருள் யாது?
மேன்மை

29) விழுமியம் என்றால் என்ன?
மனித வாழ்வை மேன்மையடையச் செய்யக் கூடிய பெறுமதி மிக்க வாழ்வியல் நற்பண்புகள் விழுமியம் எனப்படும்

30) மனிதரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள் ஐந்தினைத் தருக.

| | | |
|---|---|---|
| நன்றிமறவாமை | பொறுமை | ஒற்றுமை |
| புரிந்துணர்வு | மனித நேயம் | உண்மை பேசுதல் |

31) நாம் தவிர்க்க வேண்டிய தீயபண்புகள் ஐந்தினைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| பொறாமை | கோபம் | பேராசை | வஞ்சனை |
| பொய்பேசுதல் | களவெடுத்தல் | கள்ளுண்ணல் | சந்தேகம் |

32) சமூக நல்லிணக்கத்தோடு வாழ்வதற்கு நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய மனப்பாங்குகள் யாவை?
மனித குலம் ஒரு குடும்பம்
அனைவரும் சகோதரர்கள்

33) “கூடிவாழ்ந்தால் கோடி நன்மை” என்பதில் குறிப்பிடப்படும் நற் பண்பு யாது?
ஒற்றுமை

34) கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன?
பலரும் சேர்ந்து செய்யவேண்டிய ஒரு பணியைச் செய்யும்போது ஒவ்வொருவரும் தத்தமது பங்கை உணர்ந்து அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு விசுவாசத்தோடு செயற்படுவதாகும்.

35) கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதற்கு நாம் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்புகள் யாவை?
புரிந்துணர்வு
விட்டுக்கொடுத்தல்
தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிதல்
கலந்துரையாடல் மூலம் பிரச்சினையைத் தீர்க்கும் அணுகுமுறை.

36) கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?
வெற்றி இலகுவில் கிடைக்கும்.
ஒற்றுமை உணர்வு வளர்க்கப்படும்.
காரியங்களை இலகுவில் நிறைவேற்றலாம்.
சிறந்த சமூகத்தை உருவாக்கலாம்.

37) ‘பொறுத்தார் பூமியாள்வார்” என்பதில் குறிப்பிடப்படும் நற்பண்பு யாது?
பொறுமை / சகிப்புத்தன்மை

38) சகிப்புத்தன்மையின் சிகரமாக மகாபாரதத்தில் குறிப்பிடப்படுபவர் யார்?
தருமர்

39) சகிப்புத் தன்மை என்றால் என்ன?
எந்தவொரு சூழ்நிலையிலும் மனம் தளம்பாது பொறுமை காத்தல்.

40) “அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை” எனக்குறிப்பிடும் நூல் எது? இதில் குறிப்பிடப்படும் நற்பண்பு யாது?
திருக்குறள்
சகிப்புத்தன்மை

41) சகிப்புத் தன்மையை நாம் எவ்வாறு வளர்த்துக்கொள்ளலாம்?
இடைவிடாத மனப்பயிற்சி
இறைதியானம்

## திருஞானசம்பந்தர் தேவாரம் 03

42) திருஞானசம்பந்தரது பாடல்கள் அடங்கும் திருமுறைகள் எவை?
1ம், 2ம், 3ம் திருமுறைகள்

43) திருஞானசம்பந்தருக்கு உபநயனம் நடைபெற்றபோது பாடப்பட்ட தேவாரம் எது?
“துஞ்சலும் துஞ்சல் இலாத…..”

44) “துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்…” என்ற பாடல் எவ்வகைச் சேர்ந்தது?
பஞ்சாட்சரப் பதிகம்

45) பஞ்சாட்சர மந்திரம் எது?
நமசிவாய

46) “துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்…” எனும் பாடல் அடங்கும் திருமுறை எது?
மூன்றாம் திருமுறை

47) “துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்…” என்ற பாடலின் தலம், பண், பாடியவர் என்பவற்றைத் தருக.
தலம் - பொது பண் - காந்தாரபஞ்சமம்
பாடியவர் - திருஞானசம்பந்தர்

48) காலனைக் காலால் உதைந்தவர் யார்? யாருக்காக உதைந்தார்?
சிவபெருமான்
மார்க்கண்டேயருக்காக

49) திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடைபெற்ற தலம் எது?
திருநல்லூர்ப்பெருமணம்

50) “காதலாகிக் கசிந்து..” என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடைபெற்றபோது

51) திருஞானசம்பந்தர் இறுதியாகப் பாடிய பாடல் எது?
“காதலாகிக் கசிந்து…...”

52) “காதலாகிக் கசிந்து..” என்ற தேவாரத்தினைப் பாடியவர், தலம், பண் என்பவற்றைத் தருக.
பாடியவர் - திருஞானசம்பந்தர்
தலம் - திருநல்லூர்ப்பெருமணம்
பண் - கௌசிகம்

## பஞ்சாங்கம் 04

53) பஞ்சாங்கம் என்ற சொல்லின் பொருள் யாது?
ஐந்து உறுப்பு (பஞ்ச +அங்கம்)

54) பஞ்சாங்கத்தை முதன் முதலில் கணித்தவர் யார்?
ஆரியப்பட்டர்

55) பஞ்சாங்கத்தின் ஐந்து உறுப்புக்களும் எவை?
வாரம் திதி நட்சத்திரம் கரணம் யோகம்

56) திதி என்றால் என்ன?
பூமியைச் சுற்றிவரும் சந்திரனது சுற்றுப் பாதையின் முப்பது சம பிரிவு ஒவ்வொன்றையும் சந்திரன் கடக்க எடுக்கும் கால அளவைக் குறிக்கும்.

57) பட்சங்கள் எத்தனை வகை? அவை யாவை?
இரண்டு
சுக்கில பட்சம் - வளர்பிறை
கிருஷ்ண பட்சம் - தேய்பிறை

58) திதிகளின் எண்ணிக்கை யாது?
முப்பது (30)

59) திதிகளின் பெயர்கள் ஐந்தினைத் தருக.
பிரதமை சதுர்த்தி சஷ்டி
அட்டமி சதுர்த்தசி ஏகாதசி

60) நட்சத்திரங்கள் எத்தனை? எதிலிருந்து எதுவரை?
இருபத்தேழு (27)
அச்சுவினி – ரேவதி வரை

61) நட்சத்திரங்களின் பெயர்கள் ஐந்தினைத் தருக.
கார்த்திகை திருவாதிரை விசாகம்
சதயம் மூலம் ரேவதி

62) கரணங்களின் எண்ணிக்கை யாது?
அறுபது (60)

63) கரணம் என்றால் என்ன?
ஒரு திதியின் அரைப் பங்கு ஆகும்.

64) யோகம் என்றால் என்ன? அதன் எண்ணிக்கை யாது?
சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலம்.
இருபத்தேழு (27)

65) இலங்கையில் பயன்பாட்டிலுள்ள பஞ்சாங்கங்கள் எவை?
திருக்கணித பஞ்சாங்கம்
வாக்கிய பஞ்சாங்கம்

66) ‘நாளும் கோளும் நம்பரடியார்க்கு நலிவு செய்யா’ என்று பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்

67) பஞ்சாங்கம் பார்த்து நாம் செய்யும் காரியங்கள் நான்கினைத் தருக.
புதுமனை புகுதல் பொன்னுருக்குதல்
ஏடுதொடக்குதல் ஏர்மங்கலம்
திருமணங்சடங்கு

## சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர் 05

68) சைவசமய மறுமலர்ச்சிக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்த சமயப் பெரியார் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

69) ஐந்தாம் குரவர் என சிறப்பிக்கப்படுபவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

70) சைவசமய வளர்ச்சிக்காக தொண்டாற்றிய பெரியார்கள் நால்வரைத் தருக.
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சேர் பொன்.இராமநாதன்
சைவப்பெரியார் கா.சிவபாதசுந்தரனார்
இந்துபோரட் சு. இராசரத்தினம்
சுவாமி விபுலானந்தர்

71) அருணாசலதேசிகர் பிறந்த இடம் எது?
மட்டக்களப்பு மாவட்டத்தில் புளியந்தீவு எனும் ஊரில்

72) அருணாசலதேசிகரின் பெற்றோர் பெயர் யாது?
தந்தை - காசிநாத சோதிடர்
தாய் - சின்னப்பிள்ளை அம்மையார்

73) அருணாசலதேசிகர் பிறந்த ஆண்டு எது?
1888 ஆம் ஆண்டு

74) அருணாசலதேசிகருக்கு எங்கு வித்தியாரம்பம் செய்யப்பட்டது?
ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தைச் சார்ந்த திண்ணைப்பள்ளியில்

75) அருணாசலதேசிகர் இறையடி எய்திய ஆண்டு எது?
1969 ஆம் ஆண்டு

76) அருணாசலதேசிகர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
எண்பத்தொரு ஆண்டுகள் (81)

77) அருணாசலதேசிகர் ஆசிரியராக கடமையாற்றிய பாடசாலைகள் எவை?
நற்பிட்டிமுனை சைவப் பாடசாலை
ஆனைப்பந்தி சைவப் பாடசாலை

78) அருணாசலதேசிகர் அதிபராக கடமையாற்றிய பாடசாலை எது?
ஆனைப்பந்தி சைவப்பாடசாலை

79) அருணாசலதேசிகர் எத்தனையாம் ஆண்டு அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்?
1949ஆம் ஆண்டு

80) அருணாசலதேசிகருக்கு 'தேசிகர்' என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?
அவிநாசாநந்த அடிகளார்

81) அருணாசலதேசிகருக்கு மட்டக்களப்பு தமிழ் கலைமன்றம் வழங்கிய பட்டம் எது? எப்போது வழங்கப்பட்டது?
தேசிகமணி
1952 ஆம் ஆண்டு

82) 'சித்தாந்த சிகாமணி' என்ற பட்டத்தையுடைய சமயப் பெரியார் யார்?
சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர்

83) தேசிகர் அவர்கள் ஆற்றிய சமயப்பணிகள் எவை?
சொற்பொழிவுகளை நிகழ்த்தியமை
சைவம் சார்ந்த நூல்களை எழுதியமை
பிறசமயத் தாக்கத்திலிருந்து சைவத்தைக் காப்பதில் பணியாற்றியமை
ஆகம வழிபாட்டு மரபை நிலைநிறுத்துவதற்கு பணியாற்றியமை
மக்களை ஆன்மீக நெறியில் ஈடுபாடுடையவர்களாக மாற்றியமை

84) தேசிகரது சொற்பொழிவுகளில் காணப்பட்ட உள்ளடக்கங்கள் யாவை?
சைவசமய ஆசாரங்களைப் பேணுதல்
ஒழுக்கத்தோடு வாழுதல்
எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நேசித்தல்
சமய நூல்களைக் கற்று அறிவு பெறுதல் முதலான விடயங்கள்.

85) தேசிகரால் எழுதப்பட்ட நூல்கள் எத்தனை? அவற்றுள் சிலவற்றைத் தருக.
பன்னிரண்டு நூல்களை ஆக்கினார்.
- சைவசமய ஆரம்ப போதினி
- சைவசமய இளைஞர் போதினி
- சைவ இலக்கிய கதாமஞ்சரி
- சைவசமய சிந்தாமணி
- மெய்ஞ்ஞான தீபம்

86) 'சைவசமய களஞ்சியம்' என்பது எதனைக் குறிக்கின்றது?
தேசிகரது ஆறு நூல்களின் தொகுதி

87) தேசிகரது நூல்களில் சைவசமய சிந்தாமணிக்குரிய சிறப்பு யாது?
சைவசமயத்தை முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் ஒரே நூலாக இது எழுதப்பட்டுள்ளது.

88) 'முத்தமிழ் வித்தகர்' என அழைக்கப்படும் சமயப் பெரியார் யார்?
சுவாமி விபுலானந்தர்

89) தேசிகர் ஆற்றிய சமூகப் பணிகள் யாவை?
சைவசமயப் பாடசாலைகளை நிறுவுவதற்கு துணை நின்றமை
ஆகமவழிபாட்டு மரபிற்கு விளக்கமளித்தமை
ஆலயத் தொண்டுகளில் ஈடுபட்டமை

90) தேசிகர் எத்தனையாவது வயதில் முதலப் பிரசங்கத்தை ஆரம்பித்தார்?
பதினைந்தாவது வயதில்

## இல்லறமே நல்லறம் 06

91) வாழ்க்கையின் நான்கு படி நிலைகளும் எவை?
பிரமச்சரியம் - மாணவ நிலை
கிருகஸ்த்தம் - இல்லற நிலை
வானப்பிரஸ்தம் - துறவுக்கு ஆயத்தமாகும் நிலை
சந்நியாசம் - முழுத்துறவு நிலை

92) பிரமச்சரிய நிலை என்றால் என்ன?
நூல்களைக் கற்று, அறிவை வளர்த்து, வாழ்க்கைக்கான பண்புகளை வளர்க்கும் காலமாகும்.

93) இல்லற நிலை என்றால் என்ன?
வாழ்க்கைத்துணை ஒன்றுடன் சேர்ந்து இல்லறத்தில் இணைந்து பிள்ளைகளோடு கூடி வாழுதலாகும்.

94) ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் இருக்க வேண்டிய பண்புகள் யாவை?
ஒற்றுமை அன்பு தியாகம் அர்ப்பணிப்பு

95) “தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு” என்றவர் யார்?
திருவள்ளுவர்

96) தென்புலத்தார் எனப்படுவோர் யார்?
இறந்துபோன எமது மூதாதையர்கள்

97) பிதிர்வழிபாடு எனப்படுவது யாது?
இறந்துபோன எமது மூதாதையர்களுக்குச் செய்யும் வழிபாடு

98) இல்லறத்தார் செய்யும் பிதிர்வழிபாடுகள் இரண்டினைத் தருக.
அந்தியேட்டி சிரார்த்தம் மகாளயம்

99) இறந்த தாய்தந்தையருக்கு பிதிர்க்கடன் செய்யும் காலத்தினைத் தருக.
தந்தை - ஆடி அமாவாசை
தாய் - சித்திராப் பௌர்ணமி

100) இலங்கையில் பிதிர்க்கடன் செய்வதற்கு உகந்த ஆலயங்கள் எவை?
நகுலேஸ்வரம் - கீரிமலை
முன்னேஸ்வரம் - சிலாபம்
மாமாங்கேஸ்வரம் - மட்டக்களப்பு அமிர்தகழி

101) கடமை விரதங்கள் இரண்டு தருக.
சித்திராப் பௌர்ணமி
ஆடி அமாவாசை

102) வேதகால மக்களால் வழிபடப்பட்ட இயற்கைத் தெய்வங்கள் 4 தருக?
இந்திரன் வருணன் அக்கினி சூரியன் சோமன்

103) யாகத்தில் சொரியப்பட்ட ஆகுதிகளை தேவர்களிடம் சேர்ப்பிக்கும் தேவர் யார்?
அக்கினி

104) “செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்” என்றவர் யார்? இதில் குறிப்பிடப்படும் நற்பண்பு யாது?
விருந்தோம்பல்

105) விருந்து என்பதன் பொருள் யாது?
புதிது

106) விருந்தோம்பல் என்றால் என்ன?
புதிதாக வருபவரை வரவேற்று, உபசரித்து, உணவளித்தல் விருந்தோம்பலாகும். (விருந்து – புதிது, ஓம்புதல் - பேணுதல்)

107) விருந்தோம்பும் தொண்டினால் மேன்மையுற்ற நாயன்மார்கள் யாவர்?
இளையான்குடிமாற நாயனார்
காரைக்கால் அம்மையார்
அப்பூதியடிகள்

108) கஞ்சித்தொட்டித் தருமத்தை மேற்கொண்டவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

109) "யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி" எனக் குறிப்பிடும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
திருமந்திரம் - திருமூலர்

110) ஆலயங்களில் எவ்வாறு விருந்தோம்பும் பண்பு வளர்க்கப்படுகிறது?
அன்னதானம் வழங்கப்படுவதன் மூலமாக வளர்க்கப்படுகிறது

111) மேலான அறமாக சைவம் எவற்றைப் போற்றுகின்றது?
பசித்தோர்க்கு உணவளித்தல்

112) நாம் இயற்கையைப் பேணவேண்டியதன் அவசியம் யாது?
இயற்கைச் சமநிலையைப் பேணப்படும்போது உலகம் அமைதியாக இயங்கும், உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழும் என்பதற்காக இயற்கையைப் பேண வேண்டும்.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் 07

113) திருநாவுக்கரசு நாயனாரது பாடல்கள் அடங்கும் திருமுறைகள் யாவை?
4ம், 5ம், 6ம் திருமுறைகள்

114) நாவுக்கரசரை சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலில் போட்டபோது பாடிய பதிகம் எது?
"சொற்றுணை வேதியன் ….."

115) "சொற்றுனை வேதியன்…" என்ற பாடல் எவ்வகையைச் சேர்ந்தது?
நமச்சிவாயத் திருப்பதிகம்

116) வீட்டில் விளக்கேற்றும் போது பாடப்பட வேண்டிய தேவாரம் எது?
"இல்லக விளக்கது இருள் கெடுப்பது ….."

117) முச்சுடர்களும் எவை?
சூரியன், சந்திரன், அக்கினி

118) உள்ளத்திற்கு ஒளிதரும் விளக்கு எது?
நமசிவாய எனும் திருவைந்தெழுத்து

119) "இல்லக விளக்கது…." என்ற தேவாரத்தின் பண், பாடியவர் என்பவற்றைத் தருக.
பாடியவர் - திருநாவுக்கரசு நாயனார்
தலம் - பொது
பண் - காந்தார பஞ்சமம்

120) சிவன் மன்மதனை எரித்த தலம் எது?
திருக்குறுக்கை வீரட்டம்

121) “காப்பதோர் வில்லும் அம்பும்…” என்ற பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நாயனார் யார்?
கண்ணப்பநாயனார்

122) அந்த அடியார் இறைவன் மீது கொண்ட அன்பின் வலிமையை எடுத்துக்காட்டும் செயல் யாது?
தனது கண்களை இறைவனுக்குக் கொடுக்கத் துணிந்தமை

123) அட்டவீரட்டத் தலங்கள் எவை?
- திருக்கண்டியூர் - பிரம்மன் சிரத்தை சிவன் கொய்தமை
- திருவிற்குடி - சலந்தாசுரனைச் சங்கரித்தது
- திருக்கோவிலூர் - அந்தகாசுரனைச் சங்கரித்தது
- திருவதிகை - திரிபுரம் எரித்தமை
- திருப்பற்றியலூர் - தக்கன் சிரம் கொய்தது
- வழுவூர் - யானையை உரித்தமை
- திருக்குறுக்கை - மன்மதனை எரித்தமை
- திருக்கடவூர் - எமனை உதைந்தமை

## விரதங்கள் 08

124) விரதம் என்றால் என்ன?
மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல்.

125) விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் தந்தவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

126) திரிகரணங்கள் எவை?
மனம், வாக்கு, காயம்

127) பொறிகள் எவை?
மெய், வாய், கண், மூக்கு, செவி

128) விரதங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன? உதாரணம் தருக.
வாரவிரதம் - வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை
பட்ச விரதம் - சதுர்த்தி, பிரதோசம் (திதி விரதங்கள்)
நட்சத்திர விரதம் - கார்த்திகை, உத்தரம், பூரம், திருவாதிரை
வருடவிரதம் - நவராத்திரி, மகாசிவராத்திரி, விநாயகர்சஷ்டி, கந்தசஷ்டி

129) நட்சத்திரங்கள் எத்தனை? எதிலிருந்து எதுவரை?
27 அச்சுவினி முதல் ரேவதி வரை

130) பூரம் எத்தனையாவது நட்சத்திரம்?
11 ஆவது

131) ஆடிப்பூரம் யாரை நோக்கி அனுட்டிக்கப்படுகிறது?
அம்பிகை

132) விநாயகப் பெருமான் உதித்த தினம் எது?
ஆவணி மாதத்துப் பூர்வபட்ச சதுர்த்தி (வளர்பிறை 4 ஆம் திதி)

133) தேய்பிறையில் வரும் சதுர்த்தி எவ்வாறு அழைக்கப்படும்?
சங்கடகர சதுர்த்தி

134) ஆவணிச் சதுர்த்தி விரதத்தின்போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் யாவை?

பகலில் உபவாசம் இருத்தல்

ஆலயவழிபாட்டில் ஈடுபடுதல்

விநாயகரைப் போற்றும் தோத்திரப் பாக்களைக் பாராயணம் செய்தல்

இரவில் கொழுக்கட்டை, மோதகம் முதலியவற்றை விநாயகருக்கு நிவேதனம் செய்தல்

அறுகம் புல்லால் விநாயகரை அர்ச்சித்தல்.

135) நவராத்திரி என்பதன் பொருள் யாது?

நவ என்பது ஒன்பது – ஒன்பது இரவுகள் அனுட்டிக்கப்படுவது என்பது பொருள்

136) நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படும் கால எல்லை யாது?

புரட்டாதி மாதத்து அமாவசையை அடுத்துவரும் பிரதமை தொடக்கம் அமாவாசை வரையிலான ஒன்பது நாட்கள்.

137) நவராத்திரி காலத்தில் சக்தியை எவ்வடிவங்களில் வழிபடுவர்?

| | | |
|---|---|---|
| துர்க்கை | - வீரம் | (முதல் மூன்று நாட்கள்) |
| இலக்குமி | - செல்வம் | (அடுத்த மூன்று நாட்கள்) |
| சரஸ்வதி | - கல்வி | (இறுதி மூன்று நாட்கள்) |

138) நவராத்திரி விரதத்தின் பத்தாம் நாள் எவ்வாறு அழைக்கப்படும்?

விஜய தசமி

139) விஜயம் என்பதன் பொருள் யாது?

மேலான வெற்றி

140) அம்பிகை எந்த அசுரனை அழித்தாள்?

மகிஷன் என்ற அசுரனை

141) விஜய தசமியன்று ஆலயங்களில் நடைபெறும் சிறப்பான நிகழ்வு யாது?

மானம்பூ உற்சவம்

142) இந்தியாவில் தசரா என்ற பெயரில் பண்டிகையாகக் பெரும் கொண்டாடப்படும் சக்தி விரதம் எது?

நவராத்திரி

143) வித்தியாரம்பம் செய்வதற்கு உகந்த நாள் எது?

விஜயதசமி

144) கேதாரகௌரி விரதம் எந்தக் கடவுளுக்குரியது?

சிவபெருமான்

145) கேதாரகௌரி விரதம் அனுட்டிக்கப்படும் காலம் யாது?

புரட்டாதி மாத வளர்பிறை நவமி முதல் ஐப்பசி மாதத்து அமாவாசை வரையிலான இருபத்தொரு நாட்கள்.

146) சிவவிரதங்கள் மூன்று தருக.

| | |
|---|---|
| மகாசிவராத்திரி | கேதாரகௌரி |
| மார்கழித் திருவாதிரை | பிரதோசம் |

147) கேதாரத்து நாயகி யார்?

உமாதேவியார்

148) கேதாரகௌரி விரதத்தை அனுட்டிக்கும்படி உமாதேவியாருக்கு ஆலோசனை கூறிய முனிவர் யார்?
கௌதம முனிவர்

149) கேதாரகௌரி விரதத்தோடு தொடர்புடைய சிவமூர்த்தம் எது?
அர்த்தநாரீஸ்வரர்

150) இவ் விரதத்தின் நோக்கம் யாது?
திருமணம் முடித்த பெண்கள் தமது மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும், திருமணமாகாத கன்னிப் பெண்கள் தமக்கு சிறப்பான மாங்கல்ய வாழ்வு வேண்டியும் அனுட்டிப்பர்.

151) விரதத்தினை அனுட்டிப்பதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
இறைபக்தி கிடைக்கும்
மனம் அமைதிபெறும்
துன்பங்கள் நீங்கும்
பேரின்பம் கிடைக்கும்

## ஆடிப் பிறப்பு 09

152) பண்டிகை என்றால் என்ன?
சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் வருடத்தில் குறித்த தினத்தில் வழிபாடுகள் விருந்துகளோடு கொண்டாடப்படுவது ஆகும்.

153) அயனங்கள் இரண்டும் எவை?
உத்தராயணம்
தட்சணாயணம்

154) உத்தராயணம் என்றால் என்ன? இதன் கால எல்லை யாது?
சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நகரும் காலம்.
தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையிலான காலம் (முதல் ஆறுமாதம்)

155) தட்சணாயனம் என்றால் என்ன? இதன் கால எல்லை யாது?
சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகரும் காலம்.
ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையிலான காலம் (இறுதி ஆறு மாதம்)

156) உத்தராயண காலத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகள் யாவை?
தைப்பொங்கல்
சித்திரை வருடப்பிறப்பு

157) தட்சணாயன கால ஆரம்பத்தில் கொண்டாடப்படும் பண்டிகை எது?
ஆடிப்பிறப்பு

158) உத்தராயண கால ஆரம்பத்தில் கொண்டாடப்படும் பண்டிகை எது?
தைப்பொங்கல்

159) தேவர்களின் இராக் காலம் எனப்படுவது எது?
தட்சணாயன காலம் (ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையிலான காலம்)

160) இராசிகள் எத்தனை? எதிலிருந்து எதுவரை?
பன்னிரண்டு (12)
மேடம் - மீனம்

161) உத்தராயண காலத்தில் பிரவேசிக்கும் இராசிகள் எவை?

| | |
|---|---|
| மகரம் | கும்பம் |
| மீனம் | மேஷம் |
| ரிஷபம் | மிதுனம் |

162) மகரசங்கிராந்தி என்றால் என்ன? இது எப் பண்டிகையைக் குறிப்பிடுகின்றது?
சூரியன் தனு இராசியிலிருந்து மகரராசிக்குப் பிரவேசிக்கும் காலம் இதுவாகும்.
தைப்பொங்கல்

163) கடகசங்கிராந்தி எனப்படும் பண்டிகை எது?
ஆடிப்பிறப்பு

164) ஆடிப்பிறப்பை நாம் எவ்வாறு கொண்டாடுகின்றோம்?
ஆடிப்பிறப்பன்று கூழ், கொழுக்கட்டை முதலானவற்றைச் செய்து தேவர்களுக்கும் பிதிர்களுக்கும் படைத்து வழிபட்டு, உறவுகளோடு கூடியிருந்து உண்டு மகிழ்கின்றோம்.

165) "தங்கத் தாத்தா" எனப் போற்றப்படுபவர் யார்?
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

166) "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ...." என்று பாடியவர் யார்?
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 10

167) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்ற தொடரின் பொருள் யாது?
நாலாயிரம் எண்ணிக்கை உடைய தெய்வத்தன்மை வாய்ந்த, பாடல்களின் தொகுப்பு என்ற பொருளைக் குறிக்கிறது.

168) ஆழ்வார்களினால் அருளப்பட்ட திருப்பாடல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

169) வைணவ சமயத்தவரின் முதன்மையான தோத்திர நூல் எது?
நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

170) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
திராவிட வேதம் (தமிழ் வேதம்)

171) நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
ஸ்ரீமத்நாதமுனிவர்

172) நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள பாசுரங்களை அருளிய ஆழ்வார்களின் எண்ணிக்கை யாது?
பன்னிரண்டு

173) திருமுறைகள் எத்தனை? அதனை அருளியோர் எத்தனை பேர்?
திருமுறைகள் - பன்னிரண்டு
அருளியோர் - இருபத்தேழு

174) முதல் ஆழ்வார்கள் எனப்படுவோர் யாவர்?
பொய்கையாழ்வார்
பூதத்தாழ்வார்
பேயாழ்வார்

175) பெரியாழ்வார் எக் குலத்தைச் சேர்ந்தவர்?
வேதியர் குலத்தவர்

176) திருமழிசை எனும் தலத்தில் பிறந்த ஆழ்வார் யார்?
திருமழிசையாழ்வார்

177) பெரியாழ்வரது வளர்ப்பு மகள் யார்?
ஆண்டாள்

178) “சூடிக் கொடுத்த சுடர்க் கொடி” எனப் போற்றப்படும் ஆழ்வார் யார்?
ஆண்டாள்

179) “நாலுகவிப் பெருமாள்” எனப் போற்றப்பட்டவர்?
திருமங்கையாழ்வார்

180) ஆலி நாடு எனும் குறு நிலத்தின் மன்னனாக விளங்கிய ஆழ்வார் யார்?
திருமங்கையாழ்வார்

181) விப்ர நாயனார் என அழைக்கப்படும் ஆழ்வார் யார்?
தொண்டரடிப் பொடியாழ்வார்

182) பன்னிரு ஆழ்வார்களுள் நம்மாழ்வாருக்குரிய சிறப்புக்கள் எவை?
திருமாலின் மிகுந்த விருப்பத்திற்குரியவர்
ஏனைய ஆழ்வார்கள் உடலாக, நம்மாழ்வார் அந்த உடலின் உள்நின்று இயக்கும் உயிராகக் கருதப்படுகிறார்.

183) பன்னிரு ஆழ்வார்களையும் குறிப்பிடுக?

| | | |
|---|---|---|
| பெரியாழ்வார் | ஆண்டாள் | குலசேகராழ்வார் |
| திருமழிசையாழ்வார் | தொண்டரடிப் பொடியாழ்வார் | திருப்பாணாழ்வார் |
| மதுரகவியாழ்வார் | திருமங்கையாழ்வார் | பொய்கையாழ்வார் |
| பூதத்தாழ்வார் | பேயாழ்வார் | நம்மாழ்வார் |

184) திருப்பல்லாண்டு பாடிய நாயனார், ஆழ்வார் என்போரைத் தருக?
நாயனார் - சேந்தனார்
ஆழ்வார் - பெரியாழ்வார்

185) பெரியாழ்வார் அருளிய நூல்கள் எவை?
திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி

186) தொண்டரடிப் பொடியாழ்வாரது நூல்கள் எவை?
திருமாலை திருப்பள்ளியெழுச்சி

187) பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம் ஆகிய நூல்களின் ஆசிரியர்களைத் தருக?
குலசேகரத்தாழ்வார் திருமழிசையாழ்வார்

188) மதுரகவி ஆழ்வார் அருளிய நூல் எது?
கண்ணி நுண் சிறுதாம்பு

189) திருமங்கை ஆழ்வார் அருளிய நூல்கள் எவை?
பெரியதிருமொழி திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம்

190) நம்மாழ்வார்கள் அருளிய நூல்கள் எவை?
திருவிருத்தம் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி திருவாய்மொழி

191) நான்முகன் திருவந்தாதியை அருளியவர் யார்?
திருமழிசையாழ்வார்

192) 1ம், 2ம், 3ம் திருவந்தாதியின் ஆசிரியர்களைத் தருக?
முதல் திருவந்தாதி - பொய்கையாழ்வார்
2ம் திருவந்தாதி - பூதத்தாழ்வார்
3ம் திருவந்தாதி - பேயாழ்வார்

193) நம்மாழ்வாரைத் திருமாலாகக் கருதிப் பாடிய ஆழ்வார் யார்?
மதுரகவியாழ்வார்

194) திருமுறையின் வேறு பெயர்கள் எவை?
தமிழ் வேதம் தமிழ்மறை

195) திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

196) நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை அருளியோர் எப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்?
ஆழ்வார்கள்

## மங்கையர்க்கரசியார் 11

197) சைவசமய வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றிய பெண்ணடியார்கள் யாவர்?
காரைக்கால் அம்மையார்
திலகவதியார்
மங்கையர்க்கரசியார்
இசைஞானியார்

198) காரைக்கால் அம்மையார் வாழ்ந்த காலப் பகுதி யாது?
சங்கமருவிய காலத்து இறுதிப்பகுதி

199) அவைதிக மதங்கள் எனப்படுபவை யாவை?
சமணம் பௌத்தம் உலகாயதம்

200) தாண்டக வேந்தரால் மதம் மாற்றப்பட்ட மன்னன் யார்?
மகேந்திரவர்மன்

201) மங்கையற்கரசியார் எந்த மன்னனைத் திருமணம் செய்தார்?
கூன்பாண்டியனை (நெடுமாறன் / பாண்டியமன்னன்)

202) மங்கையற்கரசியாரின் தந்தையார் பெயர் யாது?
மணிமுடிச் சோழன்

203) பெரியபுராணம் குறிப்பிடும் பெண்ணடியார்களைத் தருக.
காரைக்கால் அம்மையார்
மங்கையர்க்கரசியார்
இசைஞானியார்

204) பதிகம் பாடும் மரபின் முன்னோடியாகத் திகழ்ந்த பெண்ணடியார் யார்?
காரைக்கால் அம்மையார்

205) “மானி” என அழைக்கப்பட்ட பெண்ணடியார் யார்?
மங்கையர்க்கரசியார்

206) ‘மானி’ என்ற பெயரின் சிறப்பு யாது?
வீரம், மானம் மிக்க சோழமன்னர்களுக்குரிய சிறப்புப் பெயர்

207) “வரி வளைக்கை மடமானி ….” என்று யார், யாரைப் போற்றிப் பாடினார்?
திருஞானசம்பந்தர் - மங்கையர்க்கரசியாரை

208) “மங்கையர்க்கு தனி அரசி” என்று போற்றியவர் யார்?
சேக்கிழார்

209) பாண்டிய நாட்டில் சைவசமயம் வீழ்ச்சியுற்றமைக்கான காரணம் யாது?
பாண்டியமன்னன் சமணத்திற்கு மதம் மாறியமை

210) பாண்டிய மன்னனின் அமைச்சராக விளங்கியவர் யார்?
குலச்சிறையார்

211) பாண்டிய நாட்டில் சமண சமயம் நிலவிய போது ஞானசம்பந்தர் எழுந்தருளி இருந்த இடம் எது?
வேதாரணியத்தில்

212) பாண்டிய நாட்டில் மீண்டும் சைவம் தழைத்தோங்க காரணமாக இருந்தவர்கள் யாவர்?
திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் குலச்சிறையார்

213) பாண்டிய மன்னனை மீண்டும் சைவத்திற்கு மதம் மாற்றியவர் யார்?
திருஞானசம்பந்தர்

214) "மங்கையற்கரசி வளர்வை கோன் பாவை" என்று பாடியவர் யார்? தலம், பண் என்பவற்றைத் தருக?
பாடியவர் - திருஞானசம்பந்தர்
தலம் - திருவாலவாய்
பண் - கொல்லி

215) பாண்டிய நாட்டில் சைவத்தை ஞானசம்பந்தர் மீண்டும் எவ்வாறு தாபித்தார்?
சமணர்களுடைய சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்தார்
சமணர்களை வாதில் வென்றார்
பாண்டியனைச் சைவனாக்கினார் இவ்வான செயல்களின் மூலமாக தாபித்தார்

216) சமணர்கள் ஞானசம்பந்தருக்குச் செய்த சூழ்ச்சி யாது?
சம்பந்தர் தங்கியிருந்த குடிசைக்கு தீவைத்தமை

217) சம்பந்தர் சமணர்களோடு பேசிய வாதங்கள் எவை?
சுரவாதம்
அனல்வாதம்
புனல்வாதம்

218) ".... பையவே தணிந்து பாண்டியனுக்காக" என்று பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்

219) பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்குவதற்கு ஞான சம்பந்தர் பாடிய தேவாரம் எது?
"மந்திரமாவது நீறு ......."

220) 'ஞான ஞாயிறு' என சிறப்பிக்கப்பட்ட நாயனார் யார்?
திருஞானசம்பந்தர்

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் 12

221) சுந்தரமூர்த்தி நாயனாரது பாடல்கள் அடங்கும் திருமுறை எது?
ஏழாம் திருமுறை

222) திருவாரூரில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் யாது?
வீதிவிடங்கப்பெருமான்

223) "ஏழிசையாய் இசைப்பயனாய் ......." என வரும் பாடலின் தலம், பண் என்பவற்றைத் தருக.
தலம் - திருவாரூர் பண் - பழம்பஞ்சுரம்

224) திருப்பாண்டிக் கொடுமுடியில் வீற்றிருக்கும் இறைவன், இறைவி பெயர் யாது?
இறைவன் - கொடுமுடிநாதர் இறைவி – பண்மொழியம்மை

225) திருவைந்தெழுத்து எது?
நமசிவாய

226) "மற்றுப் பற்று எனக்கு இன்றி..." என்ற பாடல் எவ்வகையைச் சேர்ந்தது?
நமசிவாய திருப்பதிகம்

227) "மற்றுப் பற்று எனக்கு இன்றி..." என்ற பாடலின் தலம், பண் என்பவற்றைத் தருக.
தலம் - திருப்பாண்டிக்கொடுமுடி
பண் - பழம்பஞ்சுரம்

## அன்புவழி 13

228) அன்பே சிவம் எனக் குறிப்பிடும் நூல் எது?
திருமந்திரம்

229) நாற்பாதங்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?
நால்நெறி ஞானசாதனங்கள்

230) நாற்பாதங்களும் எவை?
சரியை கிரியை யோகம் ஞானம்

231) "விரும்பும் சரியை முதல் மெஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போலன்றோ பராபரமே" எனக் குறிப்பிட்டவர் யார்?
தாயுமானவர்

232) நாற்பாதங்களும் எவற்றுக்கு ஒப்பிடப்படுகின்றது?
சரியை - அரும்பு
கிரியை - மலர்
யோகம் - காய்
ஞானம் - கனி

233) சரியை என்ற சொல்லின் பொருள் யாது?
உடம்பாற் செய்யப்படும் எல்லா விதமான தொண்டுகளும் சரியை எனப்படுகிறது.

234) சரியைத் தொண்டுகள் 5 தருக?
கோயிலையும் சூழலையும் சுத்தம் செய்தல்
திருவிளக்கேற்றுதல்
நந்தவனம் அமைத்தல்
பூசைக்கு மலர் பறித்தல்
பூமாலை கட்டுதல்
இறை புகழ் பாடுதல்

235) சரியை நெறி நின்று இறை தொண்டு ஆற்றிய நால்வரைத் தருக?
திருநாவுக்கரசு நாயனார் திலகவதியார்
நமிநந்தியடிகள் குங்கிலியக்கலயர்
தண்டியடிகள்

236) "எளிய நல் தீபமிடல் மலர் கொய்தல் ...." என்ற பாடல் இடம் பெறும் நூல் எது? இதில் குறிப்பிடப்படும் நெறி எது?
திருமந்திரம்
சரியை

237) தாச மார்க்கம் என்றால் என்ன?
இறைவனை ஆண்டானாக நினைத்து தன்னை அடிமையாக பாவித்துச் செய்யும் சரியைத் தொண்டு இதுவாகும்.

238) கிரியை நெறியில் நிற்பவனை பண்ணடுத்த உதவும் விடயங்கள் யாவை?
அறிவு நூல்களைக் கற்றல் திருமுறைகளை ஓதுதல்
செபஞ் செய்தல் விரதம் அனுட்டித்தல்

239) சற்புத்திர மார்க்கம் என்றால் என்ன?
இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் பாவித்து மேற்கொள்ளும் வழிபாடு

240) கிரியை நெறி நின்று முத்தியடைந்த மூவரைத் தருக?
திருஞானசம்பந்தர்
சண்டேசுரநாயனார்
பூசலார் நாயனார்

241) “பூசித்தல் வாசித்தல் ஜெபித்தல் போற்றுதல்” என்று குறிப்பிடும் நூல் எது? இதில் குறிப்பிடப்படும் மார்க்கம் யாது?
திருமந்திரம்
சற்புத்திர மார்க்கம்

242) யோகம் என்பதன் பொருள் யாது?
இணைதல்

243) அட்டாங்க யோக வழி நின்று இறையருள் பெற்ற இருவரைக் குறிப்பிடுக?
சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமாள்

244) அட்டாங்க யோகங்களும் எவை?

| | |
|---|---|
| இயமம் | நியமம் |
| ஆசனம் | பிரணாயாமம் |
| பிரத்தியாகாரம் | தாரணை |
| தியானம் | சமாதி |

245) “நாட்டம் இரண்டும் நடு மூக்கில் வைத்திடல்…..” எனும் திருமந்திரப் பாடல் குறிப்பிடும் நெறி யாது?
யோகம்

246) சக மார்க்கம் எனப்படுவது யாது?
இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் நெறி.

247) ஞான நெறி நின்று முத்தயடைந்தவர் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்

248) ‘புலன்களையும் மனதினையும் உலகியலிற் செல்லவிடாது தடுத்தல்’ என்பது அட்டாங்க யோகத்தில் எதனைக் குறிக்கிறது?
பிரத்தியாகாரம்

249) நாற்பாத வழிபாடுகளிலும் மிக முக்கியமானதாக குறிப்பிடப்படுபவை யாவை?
குருவழிபாடு இலிங்க வழிபாடு சங்கம வழிபாடு சிவசின்னங்களைப் போற்றுதல்

## தலயாத்திரை 14

250) தல யாத்திரை எனப்படுவது யாது?
திருவருட் சிறப்புமிக்க திருத்தலங்களைத் தரிசிப்பதற்காக மேற்கொள்ளும் புனித பயணம் தலயாத்திரை எனப்படுகிறது.

251) திருநாவுக்கரசு நாயனார் கைலைக் காட்சியைக் கண்டு தரிசித்த தலம் எது?
திருவையாறு

252) தல யாத்திரை மேற்கொள்ளப்படும் இந்திய திருத்தலங்கள் எவை?
சிதம்பரம் இராமேஸ்வரம் காசி மதுரை ஹரித்துவார்

253) இலங்கையில் நெடுங்காலமாக பாதயாத்திரை மேற்கோள்ளப்படும் முருகன் ஆலயம் எது?
கதிர்காமம் முருகன் ஆலயம்

254) கதிர்காமம் இலங்கையில் எவ்விடத்தில் அமைந்துள்ளது?
ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் மாணிக்க கங்கைக்கரையில் அமைந்துள்ளது.

255) கதிர்காமக் கந்தனில் இடம் பெறும் வருடாந்த உற்சவ தினம், உற்சவ நாட்களின் எண்ணிக்கை என்பவற்றைத் தருக?
ஆடி மாதத்தில் - 15 நாட்கள்

256) கதிர்காமத்திற்கு எப் பிரதேசங்களிலிருந்து பாதயாத்திரை மேற் கொள்ளப்படுகிறது?
யாழ்ப்பாணம் முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு

257) யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்கான பாத யாத்திரை ஆரம்பிக்கும் ஆலயம் எது?
செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

258) கதிர்காம யாத்திரையின் போது அடியவர்கள் எத் தலங்களில் தங்கிச் செல்வர்?
வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம்
திருகோணமலை வெருகல் முருகன் ஆலயம்
மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் ஆலயம்
களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்
திருக்கோவில் முருகன் ஆலயம்
உகந்தை முருகன் ஆலயம்

259) கதிர்காமத்திற்கு பாத யாத்திரை மேற்கொண்ட ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
நல்லூர் யோகர் சுவாமிகள்
காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமிகள்

260) கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்வோரின் தோற்றத்தையும், செயலையும் தருக?
யாத்திரிகர் ஒவ்வொருவர் கையிலும் வேல், மயிலிறகு ஆகியவற்றுடன், காவிநிற ஆடையணிந்து சிவசின்னங்களைத் தரித்து அரோகரா என்ற கோசத்தோடு செல்வர்.

261) கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்வோர் கடந்து செல்லும் அடர்ந்த வனப் பிரதேசங்கள் எவை?
குமண, யால, கட்டகாமம், கதிர்காமம்

262) தல யாத்திரை மேற்கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக?
சமூக ஒருமைப்பாடு ஏற்படும்
சமய காலாசார உணர்வுகள் வளரும்
இறைபக்தியும் மன அமைதியும் சாந்தியும் ஏற்படும்
ஆன்மா ஈடேற்றம் அடைய வழிவகுக்கிறது

263) பிறக்க முத்தி தரும் தலம் எது?
திருவாரூர்த்தலம்

264) தரிசிக்க முத்தி தரும் தலம் எது?
சிதம்பரம்

265) நினைக்க முத்தி தரும் தலம் எது?
திருவண்ணாமலை

266) இறக்க முத்தி தரும் தலம் எது?
காசி

267) "விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள்.." என்று பாடியவர் யார்?
அருணகிரிநாதர்

268) இப்பாடல் இடம்பெறும் நூல் எது?
கந்தரலங்காரம்

269) "அவனருளாலே அவன்தான் வணங்கி..."என்ற பாடல் இடம் பெறும் நூல் எது?
திருவாசகம்

270) யாத்திரிகர்கள் கதிர்காமக் கந்தனை அடையும் போது யாது செய்வர்?
ஆனந்த மேலீட்டால் கண்ணீர் சொரியச் சொரிய மனமுருகிப் பாடுவர் ஆடுவர் கூத்தாடுவர் அரோகரா என கோஷமிடுவர்

## உடலும் உயிரும் 15

271) ''இந்த சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' எனக் குறிப்பிட்டவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

272) ''உடம்பார் அழியின் உயிரார் அழிவார்…..'' என்றவர் யார்? இதில் குறிப்பிடப்படும் விடயம் யாது?
திருமூலர் - திருமந்திரம்
உடலோம்புதலின் முக்கியத்துவம்

273) மனம், வாக்கு, காயம் எனும் மூன்றும் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
திரிகரணம்

274) ''…. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்'' எனக் குறிப்பிடும் நூல் எது?
திருமந்திரம்

275) ''உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது ….'' என்றவர் யார்?
சுவாமி விபுலானந்தர்

276) உடலை ஓம்புவதற்கு செய்ய வேண்டியவை யாவை?
சத்துள்ள உணவை உண்ணுதல்
உடற்பயிற்சி செய்தல்
ஓய்வெடுத்தல்
சுத்தமாக இருத்தல்
ஒழுங்கான பழக்க வழக்கங்களைப் பேணுதல்

277) உடல் ஆரோக்கியம் - மன ஆரோக்கியம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு யாது?
மனம் ஆரோக்கியமில்லாது போகும்போது உடலும் பாதிப்படைகிறது.

278) அகத் தூய்மையை எவ்வாறு ஏற்படுத்தலாம்?
நல்ல எண்ணங்கள், சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
தீய எண்ணங்களை ( பொறாமை, கோபம், பேராசை) நீக்க வேண்டும்.

279) ''காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக…'' என்று பாடியவர் யார்?
திருநாவுக்கரசு நாயனார்

280) இப் பாடலில் வலியுறுத்தப்படும் விடயம் யாது?
உடலை ஆலயமாகக் கருதித் தூய்மை பேணுவதால் எமது வாழ்வு மேன்மை பெறும் என்பதைக் குறிப்பிடுகிறது.

281) ''எவ் உயிரும் என் உயிர் போல் எண்ணி ….'' என்ற பாடலின் நூல் எது? ஆசிரியர் யார்?
நூல் - பராபரக்கண்ணி
பாடியவர் - தாயுமானவர்

282) இப் பாடலில் குறிப்பிடப்படும் நற்பண்பு யாது?
எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நேசிக்க வேண்டும்.

283) பிற உயிர்களை தன் உயிர் போல் நேசித்த இரு மன்னர்களைக் குறிப்பிடுக?
சிபிச்சக்கரவர்த்தி
மனுநீதிகண்ட சோழன்

284) எதனை கோமாதா என அழைத்து வழிபடுகின்றனர்?
பசுவை

285) சைவ சமயத்தின் உயிர் நாதமாய் விளங்குவது எது?
அன்பு

286) எமது முன்னோர்கள் உயிர்கள் மீது இரக்கம் கொண்டு செய்த காரியங்கள் எவை?
தண்ணீர்த்தொட்டி அமைத்தமை
ஆவுரஞ்சிக்கல் அமைத்தமை
பசு முதலியவற்றைத் தெய்வமாக வழிபட்டனர்

287) ஜீவ காருணிய செயல்கள் 4 தருக?
வீட்டிலுள்ள பசு முதலிய பிராணிகளுக்கு உணவளித்தல்
வறியவர்களுக்கும் இல்லாதோர்க்கும் உணவளித்தல்
எல்லோருடனும் இனிய வார்த்தைகளால் அன்புடன் உரையாடுதல்
பசு முதலிய பிராணிகளை தெய்வமாகப் போற்றுதல்

288) கருடன் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
கருடாழ்வார்

289) உயிர்கள் மீது இறைவன் அருள்புரிந்தமைக்கான எடுத்துக் காட்டு ஒன்றினைத் தருக.
பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்தமை

## திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 16

290) திருவாசகம் எத்தனையாம் திருமுறை? அதன் ஆசிரியர் யார்?
எட்டாம் திருமுறை
மாணிக்கவாசக சுவாமிகள்

291) திருவாசகம், திருக்கோவையாரிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?
திருவாசகம் - 656
திருக்கோவையார் - 400

292) திருவாசகத்தில் எத்தனை பதிகங்கள் உள்ளன? அவற்றில் ஐந்தினைத் தருக?
51 பதிகங்கள்
சிவபுராணம் திருச்சதகம்
திருவெம்பாவை அச்சோப்பதிகம்
பிடித்தபத்து திருச்சாழல்

293) திருச்சதகம் என்றால் என்ன?
சதம் - நூறு
தெய்வத்தன்மை வாய்ந்த நூறு பாடல்களைக் கொண்ட பிராந்தம் திருச்சதகம் எனப்படும்.

294) “போற்றியோ நமச்சிவாய சய சய போற்றி போற்றி” என்ற பாடல் திருவாசகத்தின் எப் பகுதியில் உள்ளது?
திருச்சதகம் எனும் பகுதியில்

295) “போற்றியோ நமச்சிவாய சய சய போற்றி போற்றி …..” என்று பாடியவர் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்

296) பஞ்சாட்சர மந்திரம் எது?
நமசிவாய

297) திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
திரு + இசை + பா = திருவிசைப்பா
திரு – தெய்வத் தன்மை, அழகு, மேன்மை
இசை – புகழ், பெருமை
பா - பாடல்
அதாவது தெய்வத்தன்மை வாய்ந்த இசையுடன் பாடும் பாடல் என்பது பொருள்.

298) 9ம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?

திருவிசைப்பா
திருப்பல்லாண்டு

299) 9ம் திருமுறையை அருளியோர் தொகை எத்தனை? அவர்களது பெயர்களைத் தருக?
தொகை – 09

| | | |
|---|---|---|
| திருமாளிகைத்தேவர் | சேந்தனார் | கருவூர்த்தேவர் |
| பூந்துருத்தி நம்பிகடாநம்பி | கண்டராதித்தர் | வேணாட்டடிகள் |
| திருவாலியமுதனார் | புருடோத்தம நம்பி | சேதிராயர் |

300) “நையாத மனத்தினை” எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் எது?
திருவிசைப்பா

301) இப்பாடலைப் பாடியவர் யார்? தலம் எது?
பாடியவர் - கருவூர்த்தேவர்
தலம் - திரைலோக்கிய சுந்தரம்

302) “செய்யாயோ அருள் கோடை திரைலோக்கிய சுந்தரனே …..” என்று பாடியவர் யார்?
கருவூர்த்தேவர்

303) திருப்பல்லாண்டின் ஆசிரியர் யார்?
சேந்தனார்

304) திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்காகப் பாடப்பட்டது.

305) சேந்தனார் ஆற்றிய பணி யாது?
நாள்தோறும் சிவனடியார்களுக்கு உணவளித்தமை

306) சிதம்பரத் தேர்த் திருவிழாவில் ஒலித்த அசரீதி எது?
“ சேந்தா, நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்”

307) “மன்னுவதில்லை வளர்க நம் பக்தர்கள் …..” எனப் பாடியவர் யார்? நூல் எது?
பாடியவர் - சேந்தனார்
நூல் - திருப்பல்லாண்டு

308) “சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த …..” என்ற பாடலைப் பாடியவர், தலம், பண் என்பவற்றைத் தருக?
பாடியவர் - சேந்தனார்
தலம் - தில்லை
பண் - பஞ்சமம்

309) பஞ்சபுராணம் ஓதும்போது திருப்பல்லாண்டு எத்தனையாவதாக ஓதப்படும்?
நான்காவதாக

310) “வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது” எந்த நூலை?
திருவாசகம்

311) திருவாசகத்தின் சிறப்புக்கள் எவை?
இறைவன் மீது மனம் உருகிப்பாடப்பட்டது
படிக்கும்போது பக்தி உணர்வை ஊட்டவல்லது
மாணிக்கவாசகர் கூற இறைவனால் எழுதப்பட்டது
கேட்போர், படிப்போர் உள்ளத்தை உருக்கக்கூடியது

312) சைவசமயிகள் ஓதவேண்டிய தமிழ்வேதங்கள் இரண்டினைத் தருக.
தேவாரம்
திருவாசகம்

## நாட்டார் வழிபாடு 17

313) எமது சமய வழிபாடு முறைகள் எவை?
ஆகமம் சாராத வழிபாடு
ஆகமம் சார்ந்த வழிபாடு

314) சனாதன நெறி என அழைக்கப்படுவது எதனை? காரணம் யாது?
இந்து சமயம்
உலகிலுள்ள சமயங்களுள் மிகத் தொன்மையானது

315) "யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்ற பாடல் இடம் பெறும் நூல் எது? ஆசிரியர் யார்?
சிவஞானசித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்

316) ஆகமம் சாரா வழிபாடு என்றால் என்ன?
விதிமுறைகளுக்கு உட்படாத, நம்பிக்கை பயம் என்பவற்றின் அடிப்படையில் கிராமப்புற மக்களால் மேற் கொள்ளப்படும் வழிபாடு

317) நாட்டார் வழிபாட்டின் வேறுபெயர்கள் எவை?
கிராமிய வழிபாடு எல்லைப்புற வழிபாடு
குலதெய்வ வழிபாடு சிறுதெய்வ வழிபாடு
காவற்தெய்வ வழிபாடு ஊர்த்தெய்வ வழிபாடு

318) நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் ஆண் தெய்வங்கள் சில தருக?
வைரவர் வீரபத்திரர்
ஐயனார் பெரியதம்பிரான்
காத்தவராயன் அண்ணமார்

319) தக்கனது தலையை வெட்டி அக்கினியில் இட்டவர் யார்?
வீரபத்திரர்

320) பெரியதம்பிரானைத் துரத்திச் சென்றவர் யார்?
வீரபத்திரர்

321) பெரியதம்பிரான் யாரிடம் தஞ்சமடைந்தார்?
சலவைத் தொழிலாளி ஒருவரிடம்

322) ஐயனாருக்குரிய வேறுபெயர்களைக் குறிப்பிடுக?
அரிஹர புத்திரன்
அரிஹர சுதன்

323) சாத்தன், சாதவாகனன் முதலான பெயர்களினால் கிராமப்புற மக்களால் வழிபடப்பட்டவர் யார்?
ஐயனார்

324) ஐயப்ப விரதம் எத்தனை நாட்கள் அனுஷ்டிக்கப்படும்?
நாற்பத்தொரு நாட்கள்

325) ஐயனார் வழிபாட்டில் முதன்மை பெறும் தலம் எது?
கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயம்

326) காத்தவராயர் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறார்?
காத்தான் காத்தவராயசுவாமி

327) தமிழகத்தில் காத்தவராயர் யாருடைய அவதாரமாகக் கருதப்படுகிறார்?
முருகனின் அவதாரமாக

328) இலங்கையில் காத்தவராயர் வழிபாடு எத்தெய்வத்துடன் தொடர்புடையதாய் அமைகிறது?
மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையதாக

## சைவ சித்தாந்தத்தில் பாசம் 18

329) இந்து மதத்தின் முதன்மையான நூல்கள் எவை?
வேதம், ஆகமம்

330) இந்து மதத்தின் பொது நூல் எது?
வேதம்

331) இந்த மதத்தின் சிறப்பு நூல் எது?
ஆகமம்

332) சித்தாந்த சாஸ்திரங்கள் எத்தனை? அதை அருளியோர் எத்தனை பேர்?
நூல்கள் - 14
அருளியோர் - 6 பேர்

333) சைவசித்தாந்த நூல்கள் எவற்றின் சாரமாக அமைந்துள்ளன?
வேதம், ஆகமம்

334) வேதம் - பசு, ஆகமம் - பால் எனின் அதில் கடைந்தெடுக்கப்படும் நெய்யாகக் குறிப்பிடப்படும் நூல் எது?
திருமுறை

335) சைவசித்தாந்தம் என்பதன் பொருள் யாது?
சைவத்தின் முடிந்த முடிவு

336) சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?
பதி, பசு, பாசம்

337) சைவசித்தாந்தம் குறிப்பிடும் பாசங்கள் (மும்மலங்கள்) எவை?
ஆணவம், கன்மம், மாயை

338) பாசம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?
பந்தம், தளை, கட்டு, மலம்

339) இறைவனை அடைய விடாது ஆன்மாவைக் கட்டி நிற்பது எது?
பாசம்

340) ஆன்மாவின் இறுதி இலட்சியம் எது?
மலங்களிலிருந்து விடுபட்டு இறைவனை அடைதல்

341) ஆன்மாவுக்குரிய வேறு பெயர்கள் எவை?
உயிர், பசு, ஜீவன்

342) அனைத்து உயிர்களுக்கும் தனி முதல்வனாக இருப்பவர் யார்?
இறைவன் (பதி)

343) பாசங்களுள் வலிமையானது எது?
ஆணவம்

344) ஆணவம் என்பதன் பொருள் யாது?
ஆன்மாவின் அறிவை அணுத்தன்மை படுத்துவது

345) அன்மாவுக்கு அகந்தையையும், மமதையையும் உண்டாக்குவது எது?
ஆணவம்

346) ஆணவம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?
மூலமலம்
சகசமலம்
இருள்மலம்

347) செம்பிலே களிம்பு போலவும் நெல்லிலே உமி போலவும் ஆன்மாவை பற்றிருப்பது எது?
ஆணவம்

348) ஆணவம், ஆன்மாவை எவ்வாறு பற்றியுள்ளதாக சித்தாந்தம் குறிப்பிடுகிறது?
செம்பிலே களிம்பு போலவும்
நெல்லி உமிபோலவும் அநாதியாகவே பற்றியுள்ளது.

349) ஆணவம் 'சகசமலம்' என்று கூறப்படுவதற்கான காரணம் யாது?
ஆன்மா என்றுள்ளதோ அன்றிலிருந்து ஆணவம் அதனைப் பற்றியிருப்பதனால் சகசமலம் என அழைக்கப்படுகிறது.

350) ஆணவத்திலிருந்து விடுபடுவதற்கு யாது செய்ய வேண்டும்?
கடவுள் மீது உண்மையான பக்தி கொண்டு இறையருளைப் பெற வேண்டும்.

351) கன்மம் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
வினை / செயல்

352) கன்மம் என்றால் என்ன?
ஆன்மாக்கள் மனம், மொழி, மெய்களால் செய்யும் நல்ல செயல்களும் தீய செயல்களும் கன்மம் எனப்படும்.

353) வினை எத்தனை வகை? அவை எவை?
இரண்டு 1. நல்வினை 2. தீவினை

354) தீவினைக் குணங்கள் யாவை?
ஆசை கோபம்
பெருமை செருக்கு
நீதியின்மை முதலானவை

355) நல்வினைக் குணங்கள் யாவை?
கடவுள் பக்தி அன்பு
நீதி உண்மை
பொறுமை முதலானவை

356) ஆன்மாவின் பிறப்பிற்கு காரணமானது எது?
கன்மம்

357) கன்மத்தின் மூன்று வகைகளும் எவை?
சஞ்சிதம் - பழவினை
பிராரத்துவம் - நிகழ்வினை
ஆகாமியம் - எதிர்வினை

358) ஆன்மா பல பிறவிகளில் செய்த வினைகளின் தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?
சஞ்சிதம்

359) ஆன்மா புதிதாகச் செய்யும் வினை எப்பெயரால் அழைக்கப்படும்?
ஆகாமியம்

360) பிராரத்துவம் என்றால் என்ன?
சஞ்சித வினையிலிருந்து ஒரு பிறவியில் அந்த ஆன்மாவால் அனுபவிக்கப்படும் வினைப்பயன் பிராரத்துவம் எனப்படும்.

361) மாயையிலிருந்து தோன்றுபவை யாவை?
தனு - உடல்
கரணம் - பொறிகள்
புவனம் - உலகம்
போகம் - இன்ப துன்பம்

362) உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் காரணமானது எது?
மாயை

363) வைத்தியநாதன் என அழைக்கப்படுபவர் யார்?
இறைவன்

364) ஆணவ இருளில் இருக்கும் ஆன்மாவிற்கு மாயை எவ்வாறு துணை புரிகின்றது?
இருளில் இருப்பவனுக்க சூரிய ஒளி கிடைக்கும் வரை விளக்கு உதவுவது போல, ஆணவ இருளில் இருப்பவனுக்கு இறை ஒளி கிடைக்கும் வரை மாயை துணைபுரிகிறது.

365) துணை மலம் என சிறப்பிக்கப்படும் மலம் எது?
மாயை

366) ஆன்ம ஈடேற்றத்திற்கான படிமுறை எது?
இருவினையொப்பு
மலபரிபாகம்
சத்திநிபாதம்

367) அருவமும் உருவமுமாக நின்று ஆன்மாவுக்கு உதவுவது எது?
மாயை

368) இறைவனோடு ஆன்மா கலக்கும் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?
ஆன்ம ஈடேற்றம்

369) ஆன்மா இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதி நிற்றல் எவ்வாறு அழைக்கப்படும்?
இருவினை ஒப்பு

370) சஞ்சித வினை எவ்வாறு நீக்கப்படுகிறது?
குரு ஆன்மாவைத் தேடிவந்து தீட்சையால் சஞ்சித வினையை நீக்குவார்.

## ஈழத்தில் சைவ சமயம் 19

371) இலங்கையை சிவபூமி என அழைத்தவர் யார்?
திருமூலர்

372) இவ்வாறு சிறப்பித்துக் கூறியமைக்கான காரணம் யாது?
சிவவழிபாடு சிறப்புற்று விளங்கியமையால்

373) இதிகாசங்களையும் அதன் ஆசிரியர்களையும் தருக?
சிவரகசியம் - ஒப்பிலாமணிப்புலவர்
இராமாயணம் - வான்மீகி
மகாபாரதம் - வியாசர்

374) இலங்கையை இராவணன் ஆண்டான் எனக் குறிப்பிடும் இதிகாசம் எது?
இராமாயணம்

375) புராதன காலத்திலேயே ஈழத்தில் சைவசமயம் நிலைபெற்றிருந்தது என்பதை எடுத்துக் காட்டும் சான்றுகள் எவை?
- இலங்கையை சிவபூமி என திருமூலர் சிறப்பித்தமை
- பண்டுகாபய மன்னன் பிராமணர்கள் கிரியைகளை ஆற்றுவதற்கு யாகசாலைகளை அமைத்தமை
- மன்னர்களின் பெயர்களில் கிரிகண்டசிவன், மூத்தசிவன், மகாசிவன் எனக் காணப்பட்டமை
- ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் சைவசமயக் கடவுளை வழிபட்டமை
- இராவணன் சிறந்த சிவபக்தனாக வாழ்ந்தமை
- பழமைவாய்ந்த சிவாலயங்கள் அமைந்திருந்தமை
- நாயன்மார்களால் பாடப்பெற்ற சிவத் தலங்கள் காணப்பட்டமை.
- சோழமன்னர்களால் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டமை

376) இலங்கையில் மக்களால் பின்பற்றப்படும் சமயங்களுள் மிகவும் தொன்மையானது எது?
இந்துசமயம்

377) பண்டுகாபய மன்னன் சைவ சமயத்திற்கு ஆற்றிய பணி யாது?
பிராமணர்கள் கிரியைகளை ஆற்றுவதற்கும் வழிபடுவதற்கும் யாகசாலைகளை அமைத்தமை
சிவாலயம் ஒன்றினை அமைத்தமை

378) சிங்கள மன்னர்களுள் சைவர்களாக விளங்கிய மன்னர்கள் மூவரைத் தருக?
கிரிகண்டசிவன்
மூத்தசிவன்
மகாசிவன்

379) அரச குலத்தவர்களின் குருமார்களாக விளங்கியவர்கள் யாவர்?
பிராமணர்கள்

380) பிராமணர்கள் அரச குலத்தவர்களுக்குப் போதித்த விடயங்கள் யாவை?
அரசநீதி
போர்க்கலை
வானசாஸ்திரம்
மொழி, இலக்கியம் முதலானவற்றை

381) பௌத்தம் யாருடைய ஆட்சிக் காலத்தில் யாரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது?
தேவநம்பிய தீசன் காலத்தில்
மகிந்ததேரர் மூலம் கொண்டுவரப்பட்டது.

382) பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்து சமயத்திற்கு ஏற்பட்ட பாதக விளைவு யாது?
இந்து சமயத்தின் செல்வாக்கு குன்றத் தொடங்கியதுடன், தமிழ் மக்களுள்ளும் கணிசமானவர்கள் பௌத்தர்களானார்கள்.

383) இலங்கையில் சிவாலயங்கள் மீது பதிகம் பாடிய நாயன்மார்களைத் தருக?
திருக்கோணேஸ்வரம் - திருஞானசம்பந்தர்
திருக்கேதீஸ்வரம் - திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார்

384) தமிழகத்தில் யாருடைய ஆட்சிக் காலத்தில் சைவம் வளர்ச்சி பெற்றது?
சோழமன்னர்களது ஆட்சிக்காலத்தில்

385) அநுராதபுரத்தில் நிலைபெற்றிருந்த இராஜரட்டை அரசை கைப்பற்றிய சோழ மன்னன் யார்?
இராஜராயசோழன்

386) சோழ மன்னர்களது ஆட்சிக் காலத்தில் தலைநகரமாக விளங்கியது எது?
பொலநறுவை

387) சோழ மன்னர்களது ஆட்சிக் காலத்தில் பொலனறுவை எப்பெயரால் அழைக்கப்பட்டது?
ஜனநாதமங்கலம்

388) இலங்கையில் சோழர் ஆட்சியின் போது உறுகுணையை ஆட்சி செய்து வந்த மன்னன் யார்?
ஐந்தாம் மகிந்தன்

389) இலங்கையில் யாருடைய ஆட்சிக் காலத்தில் இந்து சமயமும் பண்பாடும் பெருவளர்ச்சி பெற்றிருந்தது?
சோழராட்சிக் காலத்தில்

390) பொலனறுவையில் எத்தனை இந்து ஆலயங்கள் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்?
பதினாறு – அவற்றுள் பத்து சிவாலயம்

391) இலங்கையில் இன்றுள்ள கோயில் கட்டிடங்களுள் மிகவும் தொன்மையானது எது?
இரண்டாம் சிவாலயம்

392) 2ம் சிவாலயம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
வானவன்மாதேவீஸ்வரம்

393) இவ் ஆலயத்தை அமைத்த மன்னன் யார்?
இராஜேந்திர சோழன்

394) இராஜேந்திர சோழனின் தாய், தந்தை பெயர் யாது?
தந்தை - இராஜராஜசோழன்
தாய் - வானவன்மாதேவி

395) பதவியாவில் அமைந்த சிவாலயம் எது?
இரவிகுலமாணிக்க ஈஸ்வரம்

396) “ரவிகுல மாணிக்கம்” என்பது யாருடைய விருதுப் பெயர்?
இராஜராஜசோழனது விருதுப் பெயர்

397) ரவிகுல மாணிக்க ஈஸ்வரத்திற்கு நன்கொடை வழங்கியவர்கள் யாவர்?
அரச குடும்பத்தவர்கள்
வணிக கணத்தவர்கள்

398) சோழர் மன்னரது ஆட்சிக் காலத்தில் இராஜராஜபுரம் எனப் பெயரிடப்பட்ட இடம் எது?
மாதோட்டம் (மன்னார்)

399) சோழ மன்னர்களால் மாதோட்டத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் எவை?
ராஜராஜேஸ்வரம்
திருவிராமீஸ்வரம்

400) சோழ மன்னர்களால் இலங்கையில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் 4 தருக?
உத்தம சோழேஸ்வரம்
பண்டித சோழேஸ்வரம்
இரவிகுலமாணிக்க ஈஸ்வரம்
வானவன்மாதேவீஸ்வரம்

401) கந்தளாய் அமைந்துள்ள மாவட்டம் எது?
திருகோணமலை மாவட்டம்

402) கந்தளாயில் அமையப் பெற்றிருந்த பிராமணக் குடியிருப்பு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?
பிரமதேயம் / இராஜராஜ சதுர்வேதி மங்கலம்

## திருமந்திரம், பெரியபுராணம், திருப்புகழ் 20

### ❖ திருமந்திரம்

403) திருமந்திரத்தின் ஆசிரியர் யார்?
திருமூலர்

404) திருமந்திரத்திலுள்ள பாடல்கள் எத்தனை?
மூவாயிரம்

405) திருமந்திரத்திலுள்ள தந்திரங்கள் எத்தனை?
ஒன்பது

406) திருமந்திரம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகிறது?
தமிழ் மூவாயிரம்
தமிழ் ஆகமம்
சுந்தரனாராகமம்

407) திருமுறைகளுள் சாஸ்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் போற்றப்படும் நூல் எது?
திருமந்திரம்

408) திருமூலர் திருமந்திரப் பாடலில் சிவபெருமானை எவ்வாறு போற்றியுள்ளார்?
சிவனுக்கு நிகரான தெய்வம் தேடினும் இல்லை
அவருக்கு ஒப்பானவர் என்று இந்த உலகத்தில் யாருமில்லை.
தீச்சுடர் வீசும் சடாமுடியினை உடையவர்
அன்பரது உள்ளத்திலே எழுந்தருள்பவர்.

409) "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை" என்று பாடியவர் யார்?
திருமூலர்

410) "பொன்னொளி மின்னும்" என்ற பாடலடி எவற்றைக் குறிப்பிடுகின்றது?
பேரொளிப் பிளம்பைக் குறிக்கிறது

411) "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை" என்ற பாடலில் வரும் புராணக் கதை யாது?
மாலும் அயனும் அடிமுடி தேடியமை

## ❖ பெரிய புராணம்

412) திருத்தொண்டர் புராணத்தின் ஆசிரியர் யார்?
சேக்கிழார்

413) திருத்தொண்டர் புராணத்திற்குரிய வேறு பெயர் யாது?
பெரியபுராணம்

414) திருத்தொண்டர் புராணத்தின் வழிநூல், முதல் நூல் யாவை?
முதல் நூல் - திருத்தொண்டர்தொகை
வழிநூல் - திருத்தொண்டர் திருவந்தாதி

415) திருத்தொண்டர் தொகையின் ஆசிரியர் யார்?
சுந்தரமூர்த்திநாயனார்

416) திருத்தொண்டர் திருவந்தாதியின் ஆசிரியர் யார்?
நம்பியாண்டார் நம்பி

417) பெரிய புராணம் குறிப்பிடும் விடயம் யாது?
இறைவனுக்கு மெய்யன்போடு தொண்டாற்றிய அடியார்களின் பக்தித்திறத்தைக் கூறுகின்றது.

418) திருத்தொண்டர் தொகையில் எத்தனை அடியவர் வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது?
அறுபத்திரண்டு (62)

419) பெரியபுராணம் எத்தனை அடியவர் வரலாற்றினைக் குறிப்பிட்டுள்ளது?
அறுபத்து மூன்று தனியடியார்கள்
ஒன்பது தொகை அடியார்கள்

420) "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று பாடியவர் யார்?
சேக்கிழார்

421) இப்பாடலில் எந்த நாயனாரது பக்தி அனுபவம் குறிப்பிடப்பட்டுள்ளது?
சுந்தரமூர்த்திநாயனார்

422) அந்தக் கரணங்கள் யாவை?
மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

423) முக்குணங்கள் எவை?
தாமசம்
இராஜசம்
சாத்திகம்

424) ஐம்புலன்களினாலும் உணரப்படுபவை யாவை?
மெய் - ஊறு
வாய் - சுவை
கண் - ஒளி
மூக்கு - நாற்றம்
செவி - ஓசை

## ❖ திருப்புகழ்

425) திருப்புகழின் ஆசிரியர் யார்?
அருணகிரிநாதர்

426) திருப்புகழைப் பாட அடியெடுத்து கொடுத்தவர் யார்?
முருகன்

427) அப்பாடலடி எது?
"முத்தைத்தரு பத்தித் திருநகை..."

428) திருப்புகழிலுள்ள பாடல்கள் எத்தனை?
16000

429) திருப்புகழின் சிறப்பு யாது?
கருத்தாழம், சொல்லழகு, இசைத்திறம், தாளக்கட்டு கொண்ட தெய்வீக அனுபவத்தைத் தரும் நூல்

430) 'வாக்கிற்னு அருணகிரி' என்ற சிறப்பை அருணகிரிநாதருக்கு கொடுத்த நூல் எது?
திருப்புகழ்

431) "கைத்தல நிறைகனி அப்பமொடுஅவல் பொரி ...." என்று பாடியவர் யார்?
அருணகிரிநாதர்

432) இப்பாடலில் வரும் புராணக் கதை எது?
திரிபுரம் எரித்தமை

433) சிவபெருமானின் தேரினது அச்சாணியை உடைத்தவர் யார்? காரணம் யாது?
பிள்ளையார்
தன்னை நினைக்காத / வழிபடாத காரணத்தினால்.

434) திருப்புகழில் போற்றப்பட்ட விநாயகப் பெருமானின் அருட்செயல்கள் எவை?
நினைத்ததைத் தரவல்ல கற்பக விருட்சம்
சிவனது தேரின் அச்சாணியை ஒடித்தவர்
வள்ளியம்மையை முருகனுக்கு மணம்முடித்து வைத்தவர்
வினைகளையெல்லாம் அழிப்பவர்

435) ஆறுபடை வீடுகளும் எவை?
- பழனி
- திருச்செந்தூர்
- திருப்பரங்குன்றம்
- சுவாமிமலை
- திருத்தணிகை
- பழமுதிர்சோலை

# ஈழத்து ஆலயங்கள் 21

## I. கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்

436) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் யாது?
கண்டி மாநகரில் கட்டுக்கலை எனும் இடத்தில்

437) இவ்வாலயத்தின் கருவறையில் வீற்றிருக்கும் கடவுள் யார்?
மீனாட்சியம்பாள் சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் (சிவபிரான்)

438) சிங்கள மக்கள் இவ்வாலயத்தை எப்பெயரால் அழைக்கின்றனர்?
கணதெவி கோயில்

439) இவ்வாலயத்திற்கு அருகே தங்கியிருந்தவர் யார்?
ஸ்ரீ குருசாமி எனும் சன்னியாசி

440) எந்த மன்னனது ஆட்சிக் காலத்திலிருந்து இவ்வாலயத்தின் மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது?
ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னனது காலத்திலிருந்து

441) இவ்வாலய இரதோற்சவத்தின் சிறப்பு யாது?
பஞ்சரதங்கள் கண்டிமாநகர வீதிகளில் பவனிவரும்

442) சிங்கள மக்களுக்கு இவ்வாலயம் முக்கியத்துவமாக இருப்பதற்கான காரணம் யாது?
கண்டி தலதா மாளிகையில் வருடாந்தம் இடம்பெறும் பெரஹரா, கண்டி மன்னர்களின் காலம் முதலாக இவ்வாலயத்தோடு தொடர்புபட்டதாகவே நடைபெற்றுவருவதன் காரணமாக முக்கியத்துவம் பெறுகிறது.

443) இவ்வாலயத்திற்கு அருகிலுள்ள குளத்திலிருந்து விநாயகர் சிலையை கண்டெடுத்தவர் யார்?
ஸ்ரீ குருசாமி எனும் சன்னியாசி

444) அக்குளத்தில் விநாயகர் சிலை இருந்தது என்பதை அவர் எவ்வாறு தெரிந்து கொண்டார்?
தன் கனவிலே கண்டுணர்ந்தார்

445) இவ்வாலய மகோற்சவத்தின் இறுதி நாளுக்குரிய சிறப்பு யாது?
பங்குனி உத்தரத்தை இறுதிநாளாகக் கொண்ட உற்சவம்

## II. ஈழத்துச் சிதம்பரம்

446) இவ்வாலயம் எங்கு அமைந்துள்ளது?
யாழ்ப்பாணக் குடாநாட்டின் காரைதீவ என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

447) இவ்வாலயம் வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
ஈழத்துச் சிதம்பரம்

448) இவ்வாலயத்தில் இருந்த ஐயனார் ஆலயத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?
குளக்கோட்ட மன்னன்

449) இவ்வாலயத்திற்கருகில் கேணி தோண்டும் போது வெளிப்பட்ட விக்கிரகம் எது?
ஐயனார் விக்கிரகம்

450) இவ்வாயத்திலுள்ள இறைவன், இறைவி பெயர் யாது?
இறைவன் - சுந்தரேசுவரர்
இறைவி - சௌந்தராம்பிகை

451) இவ்வாலயத்திலுள்ள தலவிருட்சங்கள் எவை?
அரசு வன்னி இலுப்பை

452) இவ்வாலயத்தின் தீர்த்தம் யாது?
பரமானந்த கூபம்
சித்தாமிர்த வாவி
துர்வாச சாகரம்

453) இவ்வாலயம் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படக் காரணம் யாது?
தென்னிந்தியாவின் சிதம்பரத்தைப் போலவே இவ்வாலயத்திலும் கிரியைகள் நடைபெறுவதால்

454) இவ்வாலய வருடாந்த உற்சவம் எத்தனை முறை இடம்பெறும்? எந்த மாதங்களில் நடைபெற்றது?
மூன்று முறை
பங்குனி - 18 நாட்கள்
ஆடி - 10 நாட்கள்
மார்கழி - 10 நாட்கள்

455) இவ்வாலயத்தில் சிறப்பாக இடம்பெறுவது எது?
மார்கழித் திருவாதிரை

## III. பொன்னம்பலவாணேச்சரம்.

456) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் யாது?
கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ளது.

457) இவ்வாலய அமைப்பின் சிறப்பு யாது?
திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் முற்றிலும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளதுடன் கலை நுட்பமானது

458) இவ்வாலயத்தை முதலில் யார் எத்தகையாம் ஆண்டில் கட்டினார்?
பொன்னம்பல முதலியார் - 1857 ஆம் ஆண்டு

459) இவ்வாலயத்தை கருங்கற் கோயிலாக புனர் நிர்மானம் செய்தவர் யார்? எத்தனையாம் ஆண்டு?
சேர்பொன். இராமநாதன் - 1905 ஆம் ஆண்டு

460) இவ்வாலயத்தின் இறைவன், இறைவி பெயர் யாது?
இறைவன் - பொன்னம்பலவாணேசர்
இறைவி - சிவகாமி

461) இவ்வாலய தீர்த்தத்தின் பெயர் யாது?
சுவர்ண புஷ்கரணி

462) இவ்வாலய தலவிருட்சம் எது?
அரசு

463) இவ்வாலய தீர்த்தோற்சவம் எத்தினத்தில் நடைபெற்று வருகிறது?
பங்குனி உத்தரத் தினத்தன்று

464) இவ்வாலயத்தில் எத்தனை நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது?
பத்து நாட்கள்

465) இவ்வாலய நித்திய பூசையின் சிறப்பு யாது?
தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறும்

## IV.மாத்தளை முத்துமாரி அம்மன்.

466) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் எது?
மத்திய மாகாணத்தின் மாத்தளை என்னும் இடத்தில்

467) முற்காலத்தில் பன்னாகம் என அழைக்கப்பட்ட இடம் எது?
மாத்தளை

468) இவ்வாலயத்தின் மூலஸ்த்தானம் எத்திசை நோக்கியவாறுள்ளது?
வடக்குத் திசை

469) இவ்வாலய இராஜ கோபுரத்தின் சிறப்பு யாது?
108 அடி உயர நவதள அமைப்புடையது.

470) இவ்வாலய மகோற்சவம் எந்த மாதத்தில், எத்தனை நாட்கள் இடம்பெறுகின்றது?
மாசிமாதத்தில் - பத்து நாட்கள்

471) பஞ்சரதம் பவனி வரும் ஆலயங்கள் 2 தருக?
மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம்
கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்

## V. பெரிய போரதீவு பத்திரகாளி அம்மன்

472) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் எது?
மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய போரதீவு எனும் இடத்தில்

473) இவ்வாலயத்தில் விசேடமாக இடம்பெறும் வைபவம் யாது?
தீக்குளிப்பு

474) இவ்வாலயத்தில் விசேடமாக நடைபெறும் பூசைகள் (வழிபாடுகள்) யாவை?
வெள்ளிக்கிழமைகளில் சிறப்புப் பூசை நடைபெறுகிறது.
தைப்பூசம், சிவராத்திரி, வைகாசிக் குளுத்தி, கார்த்தகைப் பூசை ஆகியவும் விசேடமாக நடைபெறுகிறது.

475) இவ்வாலய வருடாந்த உற்சவம் எந்த மாதத்தில் இடம்பெறும்?
புரட்டாதி மாதத்தில்

476) ஆரம்பத்தில் இவ்வாலயம் எவ் அமைப்பைக் கொண்டிருந்தது?
மடாலயமாக அமைந்திருந்தது.

## VI. தாந்தாமலை முருகன் ஆலயம்

477) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் எது?
மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை எனும் இடத்திலிருந்து சுமார் பத்து மைல் தொலைவில் உள்ளது.

478) தந்தாமலை வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
பொக்கிஷ மலை / தாண்டவமலை (தந்தாமலை)

479) இப்பிரதேசத்தின் இந்திரவிழா எனப்படுவது யாது?
முற்காலத்தில் மழை பெய்யாமல் வரட்சி ஏற்பட்டபோது தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று தாந்தாமலையின் உச்சியிலுள்ள விநாயகப் பெருமானுக்குப் பொங்கல் விழா நடத்தியபோது மழை பெய்ததாகக் சுறுவர். இதனையே இந்திர விழா என்றனர்.

480) எந்த மாதத்தில் எத்தனை நாட்கள் உற்சவம் நடைபெறும்?
ஆடி மாதத்தில் - பன்னிரு நாட்கள்

481) தீர்த்தோற்சவம் எத்தினத்தில் இடம்பெறும்?
ஆடிப் பௌர்ணமி தினத்தில்

## VII. செல்வச் சந்நிதி

482) இவ்வாலயம் அமைந்துள்ள இடம் யாது?
யாழ்மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் தொண்டைமானாறு என்னும் இடத்தில்

483) இவ்வாலயத்தின் மூலவர் யார்?
வேல்

484) சந்நிதிக் கந்தன், அன்னதானக் கந்தன் எனப்படுவதற்கு காரணம் யாது?
இவ்வாலயத்திலும் அதனைச் சுற்றிக் காணப்படும் பல மடங்களிலும் தினமும் அன்னதானம் வழங்கப்படுவதனால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

485) இவ்வாலயத்தில் எவ்வாறு பூசை நிகழ்த்தப்படுகிறது?
வாயைக் கட்டி மௌன பூசை செய்யப்படுகிறது.

486) இவ்வாலயத்தில் இறைவனுக்கு எவ்வாறு நிவேதனம் படைக்கப்படுகிறது?
அறுபத்தைந்து ஆலம் இலைகளில் பச்சையரிசிப் பொங்கள் படைக்கப்படும்

487) இவ்வாலய உற்சவ நாட்கள் எத்தனை?
பதினைந்து நாட்கள்

488) இவ்வாலய தீர்த்தோற்சவம் நடைபெறும் தினம் எது?
ஆவணி மாதத்துப் பூரணை

489) இவ்வாலய தலவிருட்சம் யாது?
பூவரசு

490) நித்திய அன்னதானம் வழங்கப்படும் ஆலயங்கள் 2 தருக.
செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்
நயினைநாகபூசணி அம்மன் ஆலயம்

## VIII. திமிலைத் தீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்.

491) இவ்வாலய அமைவிடம் யாது?
மட்டக்களப்பு நகரிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் இரண்டரை மைல் தூரத்தில் திமிலைத்தீவு எனும் கிராமத்தில்

492) திமிலைத் தீவு மக்களின் பிரதான தொழில் எது?
கடற்றொழில்

493) திமிலைத் தீவு எனப்படக் காரணம் யாது?
திமில் என்றால் படகு என்ற காரணத்தினால்.

494) இவ்வாலயத்தின் மூலவர் யார்?
மகாவிஷ்ணு

495) வருடாந்த உற்சவம் எத்தனை நாட்கள், எந்த மாதத்தில் இடம்பெறும்?
வைகாசி மாதம் - பத்துத் தினங்கள்

496) இவ்வாலய வருடாந்த உற்சவத்தில் இடம்பெறும் கண்ணனோடு தொடர்புடைய கதையம்சங்கள் எவை?
கண்ணனின் லீலைகளான கம்சன் வதை, உரலில் கட்டுண்ட கண்ணன் மருதமரங்களைச் சாய்த்தல், ருக்மணி கல்யாணம்

## IX. வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலயம்.

497) இவ்வாலயம் எங்கு அமைந்துள்ளது?
யாழ்ப்பாண நகரின் வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில்

498) இவ்வாலய மூலவர் யார்?
ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள்

499) இவ்வாலய தலவிருட்சம் எது?
பலா மரம்

500) இவ்வாலயத்தில் சிறப்பாக இடம்பெறும் வழிபாடுகள் எவை?
கிருஷ்ண ஜெயந்தி
வைகுண்ட ஏகாதசி
இராமநவமி
நவராத்திரி
திருவிளக்குப் பூசை

501) இவ்வாலயம் யாரால் அமைக்கப்பட்டது?
பத்மசாலி செட்டிப்பிள்ளைமாரால் (தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள்)

502) இவ்வாலய அமைப்பின் கலைப்பாணி எது?
திராவிடக் கலைப்பாணி

503) இவ்வாலய கோபுரத்தின் அடுக்குகள் எத்தனை?
ஏழு அடுக்குகள்

504) இவ்வாலய கோபுரத்தில் காணக்கூடிய சிற்பங்கள் எவை?
விஷ்ணுவின் தசாவதாரங்கள்
கண்ணனின் லீலைகள்
இராமாயணக் கதை
ஆழ்வார்களின் திருவுருவங்கள்